செய்தி வெளியீடு எண்: 793 நாள்:23.10.2020

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>*நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ் வரும் சில குறிக்கோள்களை அடைவதற்கு புரதம் மற்றும் சத்துக்கள் உடைய உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பதின் முக்கியத்துவத்தை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் வலியுறுத்தல்*</u>

<u>நீடித்த வளர்ச்சி இலக்கு 2030 தொலைநோக்கு ஆவணம் குறித்து விளக்க படக்காட்சி – 22.10.2020 அன்று மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது</u>

------

செப்டம்பர், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொது சபையின் கூட்டத்தில் அதன் உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களைக் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக, நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 தொலைநோக்கு ஆவணம், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையின் ஆலோசனையின் பேரில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆவணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஆவணத்தில் உள்ள முக்கிய கருத்துக்களை விவரிக்கும் முகமாக, விளக்க படக்காட்சி, 22.10.2020 அன்று மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு கூட்டரங்கில் நடத்தப்பட்ட கூட்டத்தில் மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

திரு. சி. பொன்னையன், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கு அரசு எடுத்து வரும் முயற்சிகளை பாராட்டியதோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாகவே, 2018ஆம் ஆண்டில் நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்ட மாநில தரவரிசை குறியீட்டில், நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ் வரும் இலக்கு–1 (வறுமை ஒழிப்பு) மற்றும் இலக்கு–7 (பெறத்தக்க விலையில் தூய எரி சக்தி) ஆகியவற்றில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது எனக் குறிப்பிட்டார். மேலும், அவர், நீடித்த வளர்ச்சி இலக்கினை எய்துவதற்காக அரசு, 1) புரதம், வைட்டமின் மற்றும் மினரல் நிறைந்த உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்குவது 2) வேளாண் பெருமக்கள் நன்மைக்காகவும் ஊரக பொருளாதார மேம்பாட்டிற்காகவும் வேளாண் விளைப்பொருட்களுக்கான வணிகச் சந்தையை பெருமளவில் உருவாக்குதல் 3) தனிநபர் வருமானம் மற்றும் வறுமைக் கோடு ஆகியவற்றை நுட்பமாக கணக்கிடுவதற்காக அடிப்படை ஆண்டினை மாற்றியமைத்தல், 4) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடனுதவிகளை தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, மகளிர் சுய உதவிக் குழு பணிகளை வணிகம் மற்றும் சந்தைப்படுத்துதலுக்காக நெறிபடுத்துதல் 5) ஊரக உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்கும் மற்றும் நீர் நிலைகளை புனரமைத்து மீட்டுருவாக்கம் செய்தலுக்காகவும் திட்டப்பணிகளின் கண்காணிப்பை வலிமைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என அறிவுறுத்தினார்.

திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு), மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்களும் மற்றும் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உயர் அலுவலர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். மேலும், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் உயர் அலுவலர்களும் இக்கூட்டத்தில் இணைய வாயிலாக பங்கேற்றனர்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**